# யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தியில் சுற்றுலாத்துறையின் வளரச்சிப்போக்கு- கல்குடாப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு


**Supervisor**
*Dr. MIM. Kaleel,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

**Researcher**
*Miss. AHF. Nirosha,*
*Department of Geography,*
*Faculty of Arts & Culture*
*SEUSL*


## ஆய்வுச் சுருக்கம்


இலங்கையின் யுத்தகாலம் என்பது 1983-2009 ஆண்டுவரையான காலமாகும். இது இலங்கையின் இருண்ட காலப்பகுதி என்றே அழைக்க வேண்டும். இக்காலப்பகுதி இலங்கை வாழ்மக்களின் உயிரைப்பறித்து அவர்களை அங்கவீனர்களாக்கியதே ஒழிய அது எத்தகைய வெற்றியையும் கண்டு கொள்ளவில்லை. வளர்ந்து செல்லும் உலகின் வேகத்தோடு இலங்கையும் கைகோர்த்துக் கொள்ள தடுக்க மாத்திரமே அவ் யுத்தத்தினால் முடிந்தது. இக் காலப்பகுதியில் நாட்டை அபிவிருத்தி செய்ய எத்தகைய நடவடிக்கை மேற்கொண்டாலும் அது தோல்வியிலேயே முடிந்தது.

2009 ஆண்டு மாண்பு மிகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்களினால் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து இலங்கையின் பல துறைகளிலும் சிறப்பாக வளரத்தொடங்கியது. அத்துறைகளில் முக்கிய வருமானம் ஈட்டும் துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. யுத்தகாலத்தின் பின்னர் இலங்கை நாடானது துரிதமாக அபிவிருத்தி கண்டு வருகின்றது. இவ் அபிவிருத்திகளில் பெரும்பாலானவை சுற்றுலாத்துறையினை மையப்படுத்தியதாகவே காணப்படுகின்றது. யுத்தத்திற்கு பின்னர் ஏற்படும் அபிவிருத்தியில் சுற்றுலாத்துறைக்கு தனிப்பங்குண்டு. எனவே தான் இவ் ஆய்வானது கல்குடாப் பிரதேசத்தினை மையப்படுத்தி அங்கு மேற்கொள்ளப்பட்ட யுத்தத்திற்கு பின்னரான சுற்றுலாத்துறை அபிவிருத்திகளை எடுத்திக்காட்டியுள்ளது. இவ் ஆய்வானது இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தியில் சுற்றுலாத்துறை வழங்கும் பங்களிப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

ஆய்வுப் பிரதேசமானது யுத்தத்தினால் பாதிப்புக்களை எதிர்கொண்ட ஓர் பிரதேசமாகும். யுத்தத்தினால் இப் பிரதேசத்தில் காணப்பட்ட சுற்றுலாத் தளங்கள் அதிகம் பாதிக்கப்பட்டன. இப் பிரதேசம் அதிகம் தமிழர்கள் காணப்பட்ட பகுதியாக காணப்பட்டமையால் ஏனைய சமூக மக்கள் அங்கு செல்வதற்கே அஞ்சினர். ஆனால் யுத்த முடிவுக்கு முன் மூடப்பட்டிருந்த கல்குடாவின் வாயில்கள் சுற்றுலாத் தொழிலின் அடிப்படையில் திறக்கப்பட்டது. உலக பிரசித்தி பெற்று இருந்த பாசிக்குட கடல் அலையை எல்லா மக்களின் கால்களும் தொட முடிந்தது. பல கொள்கைகளும் திட்டங்களும் கொண்டுவரப்பட்டு கல்குடாப் பிரதேசத்தை சூழ பல அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்பட்டது. யுத்த முடிவுக்குப் பின்னர் நான்கு வருடத்தின் பின்னர் இப்பிரதேசம் அசுர வளர்ச்சியடைந்தது. அரசும், இலங்கை சுற்றுலாத்துறை அதிகார சபையும் இணைந்து இப்பகுதியில் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாய்வானது அளவு சார், பண்பு சார் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முதலாம் நிலை தரவுகளாக நேர்காணல், வினாக்கொத்து, அவதானம், கலந்துரையாடல் போன்ற முறைகள் பயண்படுத்தப்பட்டுள்ளதுடன் இரண்டாம் நிலை தரவுகளாக இவ்வாய்வு தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், அறிக்கைகள், இணையத்தளங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளது.வினாக்கொத்து, அவதானம்,

கலந்துரையாடல் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்க்கு spss மென்பொருள் பயண்படுத்தப்பட்டுள்ளதுடன், வரைபுகள் வரைவதற்கு ms excell பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பல தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு 5 அத்தியாயங்களாகப் பிரக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தலைப்புக்கள் ஆய்வின் நோக்கத்துடன் தொடர்பு பட்ட கருத்துக்களாக விளங்குகின்றது.

இவ்வாய்வில், யுத்தம் முடிவடைந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திகள், அதற்கு தடையாக உள்ள பிரச்சனைகள், அதனை தீர்ப்பதற்க்கான ஆலோசனைகள் என்பன முன்வைக்கப்பட்டுள்ளது.

## மனித சௌக்கிய இடர்பாடுகளில் நீரிழிவு நோயினால் ஏற்படுகின்ற தாக்கங்கள் - விசேட ஆய்வு கிண்ணியாப் பிரதேசம்

**Supervisor**
*Mr. ML. Fowzul Ameer,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. S. Nasooha Nafriya,*
*Department of Geography,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

மனிதனது நோயற்ற ஆரோக்கியமான வாழ்க்கையை மனித சௌக்கிம் என்பர். இதற்கு பல்வேறுபட்ட இடர்கள் தடையாக அமைகிறது. அந்தவகையில் எனது பிரதேசத்தை எடுத்து நோக்கின் அங்கு நீரிழிவு தடையாக அமைகிறது. நீரிழிவு, சயரோகம், டயபடிஸ் என பலராலும் கூறப்படும் இந் நோயானது உலகலாவிய ரீதியில் மிக அதிகளவான மக்களைப் பாதித்துள்ளது. உலகில் 200 மில்லியன் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். 2030 இல் மொத்த நீரிழிவாளர்கள் 366 மில்லியனை அடையும் என அண்மைக் காலத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன. 2007 இல் இந்தியாவிலே (40.9 மில்லியன்) அதிகளவு நீரிழிவு நோயாளர்கள் வாழ்கின்றனர் எனவும் அடுத்து சீனா (39.8 மில்லியன்) கொண்டுள்ளதாகவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

2012 ஆம் ஆண்டு தகவலின் படி உலகில் 4.8 மில்லியன் மக்கள் நீரிழிவால் உயிரிழந்துள்ளனர். ஆசியாவிலே 45 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 95 வீதமானவை Type - 2 நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது உலக நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கையில் 20 வீதமாகும். மொத்த 4.4 மில்லியன் மக்களில் 5 இல் ஒரு பகுதியினர் இலங்கையினர். (www.worlddiabetesday, 2013)

இலங்கையில் 2005 இல் செய்யப்பட்ட மதிப்பின் பிரகாரம் 14.2 சதவீதம் ஆண்களும் 13.5 சதவீதம் பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. 2013 ஆம் ஆண்டு தகவலின் படி இலங்கையில் 25 சதவீதமானோர் நீரிழிவால் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் இதில் 10 சதவீதமானோர் மாணவர்கள் எனவும் தெரிய வருகின்றது. உலக சுகாதார நிறுவன மதிப்பீட்டின் படி இலங்கையில் 2 மில்லியன் மக்கள் நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிண்ணியாப் பிரதேச நீரிழிவாளர்களுக்கு இந் நோய் ஏற்பட்டதற்கான காரணத்தையும் இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை இனங் காண்பதோடு எதிர் காலத்தில் அதன் பாதிப்புக்களை குறைப்பது எப்படி என அடையாளம் கண்டு இது தொடர்பாக மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் கிண்ணியாப் பிரதேச மக்களை ஆரோக்கிய நிலைக்கு கொண்டு செல்ல சுகாதார பழக்க வழக்கத்தை கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தல் போன்ற நோக்கங்களுக்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாய்வுக்கான தரவுகளும் தகவல்களும் முதலாம் நிலைத்தரவு மற்றும் இரண்டாம் நிலைத்தரவு முறைமைகளை மேற்கொண்டு சேகரிக்கப்பட்டுள்ளன. நீரிழிவால் பாதிக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட 20 நீரிழிவாளர்களிடம் இருந்தும், கிளினிக் வந்த 80 நீரிழிவாளர்களிடம் இருந்துமாக மொத்தம் 100 நீரிழிவாளர்களிடம் வினாக்கொத்து மூலம் தகவல் பெறப்பட்டுள்ளன. மேலும் வைத்தியர்கள் (05), வைத்திய தாதிமார்கள் (05), குடும்ப நல உத்தியோகத்தர்கள் (03) ஆகியோரிடம் நோய் ஏற்படுவதற்கான காரணம் பற்றியும், அதற்கான சிகிச்சைகள் பற்றியும், நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்களிடம் (10) எவ்வாறு இந் நோய் அவர்களுக்கு ஏற்பட்டது என்பது

பற்றியும் நேர் காணல் மூலம் தகவல் பெறப்பட்டுள்ளன. வைத்திய சாலைக்கு சென்று வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நீரிழிவாளர்களை (20), அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை நேரடியாக அவதானிப்பின் மூலம் தகவல் பெறப்பட்டுள்ளது.

இரண்டாம் நிலைத் தரவுகளாக கிண்ணியாப் பிரதேச தள வைத்திய சாலையின் பதிவேடுகள், நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் பத்திரிகை, சஞ்சிகைகள், தொடர்பு சாதனங்கள் போன்ற ஊடகங்கள் மூலம் தரவுகளும் தகவல்களும் பெறப்பட்டு இவ் வாய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

## ‘அனர்த்த இடர்பாடுகளில் சேதங்களை குறைப்பதில் புவித்தகவல் தொகுப்பின் பயன்பாடு’ அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேசம் குறித்த கள ஆய்வு.

**Supervisor**
*Mr. MH. Mohamed Rinos,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. AL. Majitha Begum,*
*Department of Geography,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

இன்று உலகில் அனர்த்தங்கள் இல்லாத நாடுகள் இல்லை என்றாகிவிட்டது. நிமிடத்துக்கு நிமிடம் அனர்த்தங்களை மனித சமூகம் எதிர் கொண்டு வருகின்றது. எனினும் இவ் அனர்த்தங்களின் விளைவுகள் முன்னர் குறைவானதாகவும் விரைவில் ஈடுசெய்யக் கூடியதாகவுமே இருந்தன. ஆனால் இன்று நிகழ்கின்ற அனர்த்தங்களின் விளைவுகள் ஈடுசெய்ய முடியாத விளைவுகளையும் நீண்ட கால இடை வெளியையும் கொண்டதாக காணப்படுகின்றன.

இலங்கையின் மீது செல்வாக்குச் செலுத்தும் இயற்கை அனர்த்தங்களாக ஆற்று வெள்ளப்பெருக்கு, மழைநீர் வெள்ளப்பெருக்கு, வரட்சி, மண்சரிவு, சுனாமி ஆழிப்பேரலை ,மின்னல் தாக்கம் ,சூறாவளி ,நிலச்சரிவு ,பூகம்பம் ,சூறைப்புயல், றொனாடோ ,காட்டுத்தீ, கடலரிப்பு போன்றன காணப்படுகின்றன. இவற்றால் இலங்கை மக்கள் பௌதீக சமூக பொருளாதாரம் மற்றும் மனித உயிரிழப்புகளில் பாரியளவில் பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இலங்கையின் கரையோர மாவட்டங்களில் ஒன்றாக காணப்படும் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசம் அண்மையில் (2004) ல் ஏற்பட்ட சுனாமியினால் அதிகளவு உயிர் சேதத்தை எதிர்கொண்ட மாவட்டமாக (10436 இறப்பு) அடையாப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்திலும் இம் மாவட்டம் பல அனர்த்தங்களுக்கு உற்படக்கூடிய நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் வெள்ளம், வரட்சி, ,சுனாமி, மின்னல் தாக்கம், சூறாவளி, போன்ற அனர்த்தங்களாலும் அதிகளவு உயிர் பொருற்சேதங்களை வருடாவருடம் எதிர் கொண்டு வரும் மாவட்டமாகவும் காணப்படுகின்றது.

இன்றைய நவீன உலகின் தொழிநுட்ப வளர்ச்சி காரணமாக பல நாடுகளில் அனர்த்தங்களை முன்கூட்டியே கணிப்பிட்டு முன்னெச்செரிக்கை செய்தல் போன்ற பல அனர்த்தமுகாமைத்துவ செயட்பாடுகளின் போது பல உயர் தொழிநுட்ப தொடர்பாடல் சேவைகளை பயன்படுத்தி வருகின்றன. அந்த வகையில் புவித்தகவல் தொகுப்பின் பயன்பாடு இன்று எல்லா நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. புவித்தகவல் தொகுதி (Geographic Information System -Gis), பூகோள அமைவிட அமைப்பு (Global Positioning System-Gps), தொலையுணர்வு (Remote Sensing –R.S) ஆகிய மூன்று புவித்தகவல் தொகுப்புக்கள் மிகவும் துல்லியமாக அனர்த்த ஆபத்துக்களை அடையாளம் கண்டு சேதங்களை குறைப்பதில் அதிகம் பங்களிப்பு செய்வனவாக காணப்படுகின்றது. இவை இலங்கையில் குறைவான பயன்பாட்டையே கொண்டுள்ளது.

இந்த வகையில் ஆய்வுப்பிரதேசமாக அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேசத்தில் காணப்படும் சாய்ந்தமருது,காரைதீவு, நிந்தவூர் ஆகிய 3 பிதேச செயலகங்களை மையப்படுத்தியதாக அனர்த்த இடர்பாடுகளினால் தோற்றுவிக்கப்படும் சேதங்களை

குறைப்பதில் புவித்தகல் தொகுப்பின் பயன்பாடு எத்தகையது என்பதை மதிப்பிடுவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

இவ்வாய்வுக்கு இரண்டாம் நிலைத் தரவுகளே அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் வளிமண்டலத்திணைக்களத் தகவல்கள், பிரதேச செயலகத் தரவுகள், கச்சேரித்தரவுகள்,வினாக்கொத்துத் தரவுகள்,என்பவற்றின் மூலம் பெரப்பட்ட தரவுகள்,மற்றும் செய்மதி விம்பங்கள் மூலம் பெறப்பட்ட தரவுகள் Arc புளை மென்பொருள் கொண்டு படமாக்கல்செய்யப்பட்டு முன்னெச்செரிக்கை செய்யப் பரிந்துறை செய்வதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள்:** புவித்தகவல் தொகுப்பு (Gis, Gps,Rs)

## “காலரீதியாக அருகிவரும் ஈரநிலங்கள் தொடர்பான ஓர் ஆய்வு- கல்முனை மாநகர பிரதேசம்”

**Supervisor**
*Dr. MIM. Kaleel,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. A. Ritha Pritty,*
*Department of Geography,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

உலகில் காணப்படுகின்ற ஒவ்வொரு உயிர் சூழலும் தனித்துவமான பண்புகளையும் தமக்கே உரித்தான பயன்பாடுகளையும் கொண்டுள்ளது இவ்வகையில் ஈரநிலமானது இயற்கைச்சூழலின் சமநிலையை பேணுவதில் பெறுமதி வாய்ந்த ஒன்றாக காணப்படுகின்றது. இவை நீர் மற்றும் ஆரம்ப உற்பத்திகளை வழங்குவதுடன் நூற்றுகணக்கான தாவர, விலங்குகளும் தங்கியிருக்கின்றன.

உலகினுடைய எல்லா பகுதிகளிலும் ஈரநிலங்கள் காணப்பட்டாலும் அயனபகுதிகளிலும் ஆபிரிக்காவிலும் தென்மத்திய பிரேசிலியிலும் முக்கியமாக ஈரநிலங்கள் காணப்படுகின்றன. புவி மேற்பரப்பில் கிட்டதட்ட 6% அளவு ஈரநிலங்களால் மூடப்பட்டுள்ளது. இலங்கையில் பிரதானமாக இயற்கையான ஈரநிலங்களாக நன்னீர், உவர்நீர் ஈரநிலங்களும் செயற்கையான ஈரநிலங்களாக நீர்நிலைகள், குளம், வாவி, நிருயிர்வளர்ப்பு , வயல், உப்பளம் என்பன அடங்குகின்றன.

இவ்வாறாக காணப்படும் ஈரநிலங்கள் வெள்ளபெருக்கு, கடலரிப்பு, நிலம் மாசடைதல், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் குடியேற்றதிட்டம், மண்ணகழ்வு, போக்குவரத்து, நகர அபிவிருத்தி, குழாய்கிணறு, வீட்டுக்கழிவினை வெளியேற்றல், விவசாயம் இரசாயன பாவணை என்பவற்றின் காரணமாக காலத்திற்கு காலம் பல தேவைகளின் நிமிர்த்தம் இதன் பரப்பளவு குறைவடைந்து கொண்டு வருகின்றது இதன் காரணமாக மனித சமுதாயத்தில் பல பிரச்சினைகள் காலத்திற்கு காலம் உருவெடுத்துள்ளன.

இவ்வாறான பிரச்சினைகளை குறைப்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் காலரீதியாக ஈரநிலத்தில் ஏற்படும் மாற்றங்களை அவதானிப்பதன் ஊடாக மனித சமுதாயத்தில் தீர்வுகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்து ஈரநிலத்தை பாதுகாப்பதோடு நிலையான ஈரநில அபிவிருத்தியினை செய்து கொள்ள முடியும்.

ஆய்வு பிரதேசமான கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதியானது ஈரநிலங்களை அதிகளவு கொண்டதாகவும் அண்மையில் ஏற்பட்ட இயற்கை மற்றும் மானிட காரணிகளினாலும் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களினாலும் இதன் அளவு காலத்திற்கு காலம் குறைவடைந்து மக்கள் மத்தியிலும், சூழலியல் ரீதியிலும் பல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

காலத்திற்கு காலம் ஈரநிலத்தில் ஏற்படும் மாற்றத்தை கண்டறிய இடவிளக்கவியல் படம், கூகிள் படம், கொண்டு புவியியல் தகவல் தொழினுட்பத்தில் Arc Gis ஊடாக பகுப்பாய்வு செய்து படமாக்குவதன் ஊடாகவும் பிரச்சினைகளையும், காரணங்களையும் கண்டறிய

முதல்நிலை தரவுகளையும், இரண்டாம்நிலை தரவுகளையும் கருவியாக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் மூலம் இப்பிரதேசத்தின் ஈரநில அழிவினை தடுத்து முக்கியத்துவத்தை உணர்த்துவதோடு எதிர்காலத்தில் சிறந்த பகுப்பாய்வு திட்டமிடலின் மூலம் நிலைத்திருக்கும் அபிருத்தியை ஏற்படுத்துவதை குறியாக கொண்டுள்ளது.

## "நிலச்சீரழிவின் சூழலியல் தாக்கங்களை தவிர்க்கும் செயற்பாடுகள்"- சாய்ந்தமருது பிரதேசத்தில் ஓர் ஆய்வு

**Supervisor**
*Mr. MH. Mohamed Rinos,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. MR. Fathima Rakshan,*
*Department of Geography,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

இயற்கை வளங்களில் முதன்மையானது நிலமாகும். ஆண்டிற்காண்டு அதிகரிக்கின்ற மக்கள் தொகைக்கு உணவு ஊட்டுவதும் நிலமேயாகும். இன்று உலகில் நிலச்சீரழிவு இடம்பெறாத நாடுகள் இல்லை என்றாகிவிட்டது. நாளாந்தம் நிலம் மாசடைவின் விளைவுகளை மனித சமூகம் எதிர் கொண்டு வருகின்றது. எனினும் இச்சீரழிவின் விளைவுகள் குறைவானதாகக் காணப்பட்டதுடன் அதன் பாதிப்புக்களும் குறைவாகவே உணரப்பட்டது. ஆனால் இன்று நிலம் பல்வேறு காரணிகளால் மாசடைவிற்குள்ளாவதுடன் அதன் அளவும் குறைவடைந்து வருகின்றமை முக்கிய அம்சம் ஆகும்.

இலங்கையில் அதிகளவில் இடம்பெறும் நிலச்சீரழிவு நடவடிக்கைகளாக கரையோர மண்ணரிப்பு, மண்ணகழ்வு மற்றும் மண்சரிவு, குடியிருப்புக்கள், ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பனவற்றோடு விவசாய நடவடிக்கைகள், பாலை நிலமாதல், காடழிப்பு மற்றும் சேனைப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள், கழிவுப் பொருட்கள், குப்பை கூழங்கள் போன்ற இவ்வாறான பல்வேறு காரணிகளால் நிலச்சீரழிவு ஏற்படுகின்றன. இதன் காரணமாக இலங்கை மக்கள் பௌதீக, பொருளாதார மற்றும் உயிரியல் ரீதியில் பாரியளவில் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இலங்கையின் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசமான சாய்ந்தமருதில் அண்மையில் (2004) ல் ஏற்பட்ட சுனாமியினால் விவசாய நிலங்கள் பல குடியிருப்பு நிலங்களாக மாற்றப்பட்டதன் காரணமாக, விவசாய நிலங்களின் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. (சாய்ந்தமருது கரைவாகுவட்டை – வொலிவேறியன் கிராமம்). இதன் காரணமாக விவசாயப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் தோணாவெட்டுக் கால்வாய்களும், அதனை அண்டியுள்ள பிரதேசங்களும், மற்றும் நிலம் வளமற்றுப் போதல், நிலப்பற்றாக்குறை, விவசாய நிலத்தின் பற்றாக்குறை, வெப்ப உயர்வு, பாலை நிலமாதல், மண் வளமற்றுப் போதல் என்பவற்றோடு நிலத்தில் சேரும் கழிவுகள், அதனுடன் வெளியேறும் பல்வேறு வாயுக்கள் காரணமாக தரைப்பகுதியும் வளிமண்டலமும் இப்பகுதியில் காணப்படும் உயிர்ச்சூழலும் பாதிப்புக்குள்ளாவதுடன், மனிதனும் பல்வேறு நோய்களுக்கு உட்பட்டு மரணம் கூட ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில் எனது ஆய்வுப்பிரதேசமாக அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது பிரதேசமானது, 17 கிராம சேவகர் பிரிவுகளை மையப்படுத்தியதாக நிலச் சீரழிவின் சூழலியல் தாக்கங்களை தவிர்க்கும் செயற்பாடுகள் எத்தகையது என்பதை மதிப்பிடவே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாய்வுக்கு முதலாம் நிலைத் தரவுகளாக, நேர்காணல், ஒழுங்கமைக்கப்பட்ட பிரதான தகவலாளிகளைப் பேட்டி காணல், இலக்குக் குழு கலந்துரையாடல், வினாக்கொத்து, நேரடி அவதானம் போன்றவற்றின் மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகளாக, சாய்ந்தமருது பிரதேசச்

செயலகத்தினாலும், அம்பாறை கச்சேரியிலிருந்தும், பொத்துவில் வானிலை அவதான நிலையத்திலிருந்தும், சுகாதார சுத்திகரிப்பு நிலையத்திலிருந்தும், கல்முனை மாநகர சபையினாலும், வைத்தியசாலைகளிலும் கிடைக்கப்பெற்ற தகவல்கள், புள்ளி விபரங்கள் என்பவற்றோடு, நூல்கள், இணையத்தளங்கள், பத்திரிகைகள், அறிக்கைகள் என்பவற்றோடு நேரடியான ஒளிப்படங்கள் போன்றவற்றின் மூலமும் தரவுகள் பெறப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள்:** நிலச்சீரழிவு (கரைவாகுவட்டை – வொலிவேறியன் கிராமம், தோணாவெட்டுக் கால்வாய்)